අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026

General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

**අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය**
**பயிற்சி வினாத்தாளுக்கான விடைப்பத்திரம்**
**Answer sheet for tha Practice Paper**

# ලංකා ඉතිහාසය
# History of Lanka
# இலங்கை வரலாறு



**Answer Paper – I ,II** விடைத்தாள் - **I,II** (மொழி மூலம் தமிழ்)

ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026

**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர தர)ப் பரீட்சை - 2026**

General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

විෂයය අංකය / பாட இலக்கம்: **25**

විෂයය / பாடம்: **இலங்கை வரலாறு**

**ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்**

**I පත්‍රය / பத்திரம் I**

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 5 | 11 | 4 | 21 | 5 | 31 | 2 |
| 02 | 4 | 12 | 4 | 22 | 3 | 32 | 1 |
| 03 | 1 | 13 | 5 | 23 | 4 | 33 | 2 |
| 04 | 2 | 14 | 1 | 24 | 1 | 34 | 5 |
| 05 | 4 | 15 | 5 | 25 | 3 | 35 | 3 |
| 06 | 2 | 16 | 3 | 26 | 2 | 36 | 5 |
| 07 | 3 | 17 | 2 | 27 | 1 | 37 | 2 |
| 08 | 2 | 18 | 4 | 28 | 3 | 38 | 1 |
| 09 | 5 | 19 | 1 | 29 | 2 | 39 | 4 |
| 10 | 2 | 20 | 3 | 30 | 4 | 40 | 3 |

ஒரு விடைக்கு 1 புள்ளி வீதம் **1 x 40 = 40**


අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

| | | |
|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය I<br>இலங்கை வரலாறு I<br>History of Sri Lanka I | 25 | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

25 | T | II

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- ❖ **பகுதி II ஆனது A,B,C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.**
- ❖ **பகுதி A யின் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி B,C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடை தருக**

**(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இலங்கை புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)**

## பகுதி B

**2.** இலங்கை வரலாற்றைக் கற்கும் போது தொல்பொருள் மூலாதாரங்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக. (16 புள்ளிகள்)

- கல்வெட்டுகள், நாணயங்கள், பொற்பத்திரங்கள், செப்பேடுகள், தகடுகள், சுவர், மரம், பல்வேறு பாத்திரங்கள் என்பன தொல்பொருள் மூலாதாரஙடகளாக கருதப்படுகின்றன

கல்வெட்டுக்கள்

- கல்வெட்டுகள், பொற்பத்திரங்கள், செப்பேடுகள், தகடுகள், சுவர், மரம், பல்வேறு
- பாத்திரங்கள் என்பவற்றில் எழுதப்பட்டவை ஆவணங்கள் எனப்படும்.
- கல்வெட்டுகள் பல்வேறு வகைப்படும். குகை, குன்று, சுவர், தூண் கல்வெட்டுகள் என
- அவற்றை வகைப்படுத்தலாம்.
- ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் பிராமிய (பிராகிருத) எழுத்துக்களால்
- ஆனது. குருமாருக்கு குகைகளைத் தானமளித்தல் தொடர்பாகவே அவற்றில்
- பெரும்பாலானவை எழுதப்பட்டிருந்தன.
- கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பின்னரே விவரமான கல்வெட்டுகள் எழுதப்படத் தொடங்கின.
- விகாரைகள், ஆராமைகளுக்கு நிலபுலன்களை வழங்குதல் ஆராமைகளின் நிர்வாகம்.
- அரச சட்டங்களை மக்களுக்கு அறியப்படுத்தல், வரிவசூலித்தல், வர்த்தகம்,
- குற்றவாளிகளை மன்னித்தல், ஒருவருடைய சேவை நலனைப் பாராட்டுதல் போன்ற
- பல்வேறு விடயங்களைக் குறித்து வைப்பதற்குக் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. தற்போது
- கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் புராதானமானதாக அறியப்பட்டுள்ளது உத்திய
- மன்னனுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மிஹிந்தலை சுவர்க் கல்வெட்டாகும்.
- மஹாவம்சம் உட்பட ஏனைய இலக்கிய மூலாதாரங்களில் உள்ள விடயங்களை
- உறுதிப்படுத்திக் கொள்வதில் கல்வெட்டுக்கள் முக்கியமானதாகும்.
- உம்: துட்டகைமுனு மன்னனது பத்து மாமல்லர்களைப்பற்றிக் கல்வெட்டுக்கள் உறுதிப்
- படுத்தியுள்ளன.
- கொரவக்கல கல்வெட்டிலும் சித்துல்பவ்வ (தளபதி மித்ச, நந்திமித்த), வெல்
- எல்லுகொடகந்த கல்வெட்டு, சங்கபால விஹாரைக் கல்வெட்டு, (தளபதி, பசதேவ,
- புஸ்ஸ தேவ) இதற்கு மேலாக பல்லேபெத்த, எகொடபத்துவ கல்வெட்டுகளிலும்
- இவர்களைப் பற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
- மஹிந்த தேரரின் வருகை கல்வெட்டுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
- வம்சக்கதைகளில் கூறப்பட்டுள்ள அரசியல், நிர்வாகம், சம்பந்தப்பட்ட விடயங்கள்,
- பொருளாதார, சமூக, கலாசார விடங்கள் பெருமளவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
- வம்சக் கதைகளில் கூறப்படாத தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றைப்
- பிரதி செய்யும்போது ஏற்பட்ட தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கும் கல்வெட்டுக்கள்
- முக்கியத்துவமானவையாகும்.
- உ.ம்: இளவரசர்கள், பிராந்திய அரசர்கள் பற்றியவை (குசலானகந்த, ஹென்னன்னேகல,

- யம்பரகல, யட்டஹலென போன்ற கல்வெட்டுகள்)
- • கதுறுவெல கல்வெட்டில் அமைச்சர் பரம்பரை ஐந்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளமை
- • விஹாரைகளின் நிர்வாகம் பற்றிய விடயங்கள் (மிஹிந்தலை சுவர்க் கல்வெட்டு,
- களுதியபொக்குண கல்வெட்டு)
- • வசப மன்னனின் இரு புதல்வர்களான உதர (ஹெபஸ்ஸ கல்வெட்டு, துடக
- (கம்மென்னாகந்த கல்வெட்டு) என்போர் மகாராஜா பட்டத்துடன் ஆட்சிபுரிந்தமை.
- • இலக்கிய மூலாதாரங்களில் வெளிப்படாத கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்
- நிலவிய பிரதேச நிர்வாக அலகுகள் பல பற்றிய தகவல்கள் கல்வெட்டில் கிடைக்கப்
- பெற்றுள்ளமை.
- உம்: பம்பரகல, கோணவத்த, எம்புல் அம்பே, நெட்டுக்கந்த பெரியபுளியன்குளம்,
- குசலானகந்த , சித்துல்பவ்வ
- • இலங்கையின் அரசாட்சியின் ஆரம்பம், இலக்கிய மூலாதாரங்களுள் இந்தியாவுடன்
- தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. என்றாலும் கல்வெட்டுகளில் இருந்து பெறப்படும்

**3.** "துட்டகைமுனு மன்னனின் வெற்றிப் பயணத்திற்கு வழியமைத்துக் கொடுத்தவர் காவன்திஸ்ஸ மன்னனாவார்" ·

**(i)** காவன்திஸ்ஸ மன்னனின் ஆட்சி மையத்தைப் பெயரிடுக. (1 புள்ளி)

மாகமை

**(ii)** காவன்திஸ்ஸ மன்னனின் பட்டத்து ராணி யார்? (1 புள்ளி)

விஹாரமகாதேவி

**(iii)** உறுகுணை வம்ச ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட தூபிகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

திஸ்ஸமகாராம, யடாலவெஹெர, சேறுவாவில மங்கல மகாசாய,

**(iii)** மேலே தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றி கலந்துரையாடுக. (12 புள்ளிகள்)

- துட்டகைமுனு மன்னனின் வெற்றிப் பயணத்திற்கு காவன்திஸ்ஸ வழியமைத்துக் கொடுத்தமை பற்றிய சான்றுகள் பல மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஏனைய மூலாதாரங்களிலும் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முத்தியப்படுத்துதப்பட்ட நாட்டை கட்டியெழுப்புவதற்காக துட்டகைமுனு மன்னனுக்கு காவன்திஸ்ஸ பல உதவிகளை வழங்கியுள்ளார். திருமண தொடர்புகளின் மூலம் தென் பிரதேசத்தை அரசுடன் இணைத்துக்கொண்டமை (உதாரணம்: களனி, கிரிநுவர)
- சமய தொடர்புகள் மூலம் கிழக்கு பிரதேசத்தினை இனைத்தமை
- பௌத்த பிக்குகளின் ஆலோசணைகளை தமது மகனுக்கு பெற்றுக் கொடுத்தமை
- தென் மற்றும் கிழக்கு பிரதேசங்களின் சமய கட்டங்களை அபிவிருத்தி செய்து பௌத்த பிக்குகளினதும் மக்களினதும் நன்மதிப்பை பெற்றமை
- காவந்திஸ்ஸ மன்னனின் கீழ் உறுகுணை ஐக்கியப்படல்
- எல்லாள மன்னனுக்கு எதிராக உறுகுணையில் படைகள் ஒன்று திரட்டப்படல்.
- ஆயத உற்பத்தி மற்றும் ஆயத சேகரிப்பு
- சத்தாதிஸ்ஸன் மூலம் திகாமடுலையில் படையொன்றை ஏற்பாடு செய்தமை
- பத்து மாமல்லர்களின் உதவியை பெற்றுக்கொடுத்தமை

**4.** இராசரட்டை நாகரிகத்தின் பொருளாதாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

**1.** விவசாயம்

**2.** கைத்தொழில்

**3.** வர்த்தகம் (16 புள்ளிகள்)

- விவசாயம்
- பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக
- மூலாதாரங்களிலிருந்து தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை.
- விவசாயம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெறுவதற்கான காரணிகள்
- விவசாய முறைகள்:
- சேற்று நிலச்செய்கை
- சேனைச் செய்கையும்.
- மந்தை வளர்ப்பு
- விவசாய உபகரணங்களும், தொழிநுட்பங்களும் ஆவணங்களின் மூலம்
- இது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை.
- உ-ம்: தோணிக்கல் கல்வெட்டு
- விவசாயமும் அதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களும்.
- விவசாயத்தை விருத்தி செய்வதில் ஈடுபட்ட ஆட்சியாளர்கள்.

- வியாபாரம்:
- இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள வியாபார வழிகள்
- வியாபாரமும் இலங்கையில் குடியேற்றங்கள் உருவானமையும்.
- உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரமும், வர்த்தக சந்தையும்.
- இலங்கையுடன் நெருக்கமாக வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகள்.
- ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்.
- பிரதானமான துறைமுகங்கள்
- வர்த்தகப் பொருட்களைக் கையாளும் போக்கு
- பணப் பரிமாற்றம் இடம்பெற்றமை
- வர்த்தக அமைப்புகளும் வர்த்தகத் தரங்களும்
- வெளிநாட்டு வியாபாரத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள்
- பதுளை தூன் கல்வெட்டு தொடர்பான விளக்கம்
- தென்னிந்திய வர்த்தக குழுக்கள் பற்றிய விளக்கம்
- காம்போடிய வர்த்தக குழுக்கள் பற்றிய விளக்கம்
- சுங்க வரி பற்றிய விளக்கம்
- தென்னிந்திய வர்த்தக சங்கங்கள் பற்றி விபரங்கள்

- கைத்தொழில்
- 18 தொழில் கலைஞர்களின் வருகை (வம்சக் கதைகள்)
- ஆவணங்கள், இலக்கிய மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் கைத்தொழில் தகவல்கள்
- தொல்பொருள் எச்சங்கள்
- கைத்தொழிலும் அவற்றிற்குப் பயன்படுத்திய உபகரணங்களும்

தொல்பொருள் மூலாதாரங்கள்

| | | |
|---|---|---|
| இரும்பு கைத்மெதாழில் | - | முத்துகல கல்வெட்டு |
| தங்க கைத்தொழில் | - | மன்டகல கல்வெட்டு |
| தந்த செதுக்கல் | - | வேகிரிகல கல்வெட்டு |
| நூல்நூற்றல் | - | வேஹரகம கல்வெட்டு |

<u>இலக்கிய மூலாதாரங்கள்</u>

| | | |
|---|---|---|
| மட்பாண்ட கைத்தொழில் | - | கும்பகாரகம |
| இரத்திணக்கல் பட்டை தீட்டல் | - | மணிகாரகம |

இரும்புருக்கு கைத்தொழில் மேற்கொள்ளப்பட்டமை சமனலவெவ, சீகிரிய பிரதேசம்
இரும்புருக்கு உழை பயன்பாடு, ஊதுளை கருவி பயன்பாடு

5. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
(புள்ளிகள் **08 x 2 = 16** )

**(i)** மத்திய மலை நாடு

- பூகோளப் பிரிவிற்கு அடிப்படையாய் அமைந்த இடமாகும்
- மலை, வன, நீர் அரண்களால் பாதுகாக்கப்பட்டுள்ளமை
- மத்திய மலைநாட்டில் தோன்றிய இராச்சியங்கள் உதாரணம் கம்பளை, கண்டி
- மத்திய மலை யநாட்டினால் முழுநாட்டிலும் அரசியல் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது சிரமமாய் இருந்தமை
- வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளும் உள்நாட்டு கலவரங்களும் ஏற்பட்டபோது பாதுகாப்பு இடமாய் இருந்தமை
- இலங்கையின் ஆற்றுத்தொகுதிகளின் போசனை பிரதேசமாய் இருந்தமை
- மலைநாட்டில் பிரித்தானியர் பெருங்தோட்ட செய்கையை ஆரம்பித்தமை, சமூக பொருளாதார கலாச்சார மாற்றத்திற்கு காரணமாய் இருந்தமை
- இடை வலையத்தில் ரப்பர் செய்கையும் கரையோர பிரதேசத்தில் தென்னையும் பயிரிடப்பட்டமை
- தலைநகரத்தில் இருந்து தூரத்தில் அமைந்திருந்தமையால் மத்திய மலைநாடு இலங்கையின் சுதந்திரப் போராட்டங்களின் மத்திய நிலையமாக திகழ்ந்தது

**(ii)** தேவநம்பியதீச மன்னன்

- அசோகப் பேரரசருடன் கொண்டிருந்த தொடர்புகள்
- முடிசூடுவதற்காக மௌரியப் பேரரசரிடமிருந்து பஞ்சவஸ்துக்கள் கிடைக்கப்
- பெற்றமை.
- மௌரிய முடிசூட்டு முறை இந்நாட்டில் ஸ்தாபிதமடைந்தமை. (ஆரம்பமாதல்)
- தேவானம்பிய'' எனும் பட்டம் கிடைக்கப்பெற்றமை.
- பௌத்த மதம் அறிமுகமடைதலும், நாடு முழுவதும் வியாபித்தலும்.
- பிக்கு, பிக்குணி, பக்தன், பக்தை, என்ற சமயப்பிரிவினர் தோன்றுதல்.
- புனித வெள்ளரசு மரம் நடப்படல்.
- புத்தர் பெருமானின் தாதுப்பொருட்களை வைத்து தூபராம தூபியைக் கட்டுதல்.
- பௌத்த சமயம் அரச மதமாதல்.
- மகாநாக இளவரசனால் மாகமையைத் தலைநகராகக் கொண்டு உறுகுணை
- இராச்சியம் உருவாதல்.

**(iii)** யாப்பூஹவ இராச்சியம்

- யாப்பகுவ அமைவும் தனித்துவ வளர்ச்சியும்
- தமதன்யாவின் பின்னர் தலைநகராக அமைந்தமை
- யாப்பூஹவ இராசதானி தொடர்பான தொடர்பான தகவல்கள் குறைவாக காணப்படல்
- சுப எனும் சேனாதிபதியால் யாப்பகுவையில் பாதுகாப்பான இடத்தில் ஆட்சி ஆரம்பமாதல் நான்காம் விஜயபாகு நகரையும் மாளிகையையும் அமைத்தல். அவனது ஆட்சியின் இரண்டாவது ஆண்டில் மித்த என்ற சேனாதிபதியின் சூழ்ச்சியால் அரசன் கொலை செய்யப்படல். அவனது சகோதரன் முதலாம் புவனேகபாஹ பயத்தால் தப்பிச்செல்லல், கூலிப்படையினரால் மித்த என்ற சேனாதிபதி கொல்லப்படவே முதலாம் புவனேகபாகு **1272**ல் அரசனாதல் (தம்பதெனியாவில்)
- புவனேபாகு பாண்டிய ஆக்கிரமிப்பு சிலவற்றிற்கும், சிங்கள இனத்தவர் சிலரது சவாலுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படல். அவற்றை அவ் வெற்றிகரமாக முறியடித்து யாப்பகுவாவிக்கு மீண்டு வந்து அதனை தலைநகராக்கி ஆட்சி செய்தல்
- முதலாம் புவனேகபாகு வெளிநாட்டவருடன் கொண்ட தொடர்புகள்
  - **1283**இல் எகிப்தின் சுல்தானுக்கு தூது குழுவை அனுப்புதல்
  - சீனாவின் குப்ளாய்கான் புத்தரின் பிச்சை பாத்திரத்தை கேட்டல்
- புவனேகபாகுவின் பின்னர் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டமை
- யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்திகள் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளல்
- பாண்டியர்கள் யாப்பகுவாவை கைப்பற்றியதாக கூறப்படுகிறது

- பற்சின்னம் பாண்டிய நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படல்
- விரைவில் யாப்பக ராஜ்ஜியம் மறைதல்
- கலைஞர்களுடைய பங்களிப்பு

**(iv)** தம்பதெனிய இராசதானிக் கால கல்வி மற்றும் கலாசார வளர்ச்சி

- கல்வி
- பிரிவெனாக்களை உருவாக்கியமையும் அவற்றை கலைகளின் மையத்தளங்களாக
- ஆக்கியமையும். (நந்தன பிரிவெனா, குருநாகல மகேந்திர பிரிவெனா, பராக்கிரம
- பிரிவெனா, பலாபத்தல, வகிரிகல, தம்பதெனியா, விஜயசுந்தரா ராமய)
- வெளிநாடுகளிலிருந்து திரிபீடகத்தில் புலமை பெற்ற பிக்குகளை அழைத்து வந்து
- பாளி இலக்கியங்களது வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தமை.
- மன்னன் படித்த பண்டிதனாக இருந்தமையும் நூலாசிரியனாகக் காணப்பட்டமையும்.
- (விசுத்தி மார்க்க சன்னய, வனவினிச சன்னய, கவிசிலுமின) இவர் ‘‘கலிகால
- சாஹித்திய சர்வக்ஞ பண்டித’’ எனும் பட்டப்பெயர் உடையவராகக் காணப்பட்டார்.
- நூல்களின் உருவாக்கத்திற்கு ஆதரவளித்தமை. இதனால் சிங்கள, பாளி, சமஸ்கிருத
- மொழிகளில் பல்வேறு துறைசார் நூல்கள் தோற்றம் பெற்றன.
- தம்பதெனிய யுகத்தில் கல்வி தொடர்பாக நோக்கும் போது 12ம் நூற்றாண்டில்
- காணப்பட்ட அஷ்டமூல பிரிவெனாக்களுக்கு ஒப்பாக இக்காலத்தில் பங்சமூல
- பிரிவெனா எனப்படும் கல்வி நிறுவனங்கள் பற்றி அறியக்கிடைக்கின்றது.
- மயுரபாத பிரிவெனா மற்றும் தேவபதிராஜ பிரிவெனா என்பன இக்காலத்தில்
- காணப்பட்ட உன்னதமான இரு கல்வி மையத்தளங்களாகும்.

- சிங்கள மொழியில் நூல்கள் எழுதப்பட்டமை
- பூஜாவலிய, கவிசிலுமின, வனவினிசசன்னய - மயுரபாத பிரிவெனாதிபதி புத்தபுத்ர தேரர்
- சிதத் சங்கராவ, வனவினிச சன்னய - 2ம் பராக்கிரமபாகு மன்னன்
- விசுத்தி மார்க்க சன்னய சத்தர்ம - வேதேக தேரர்
- 
- ரத்னாவலிய - தர்மசேன தேரர்
- பாளி மொழியில் நூல்கள் எழுதப்பட்டமை

- ரசவாஹினி, சமன்தகூட வர்ணனாவ வேதேக தேரர்
- பேசஜ்ஜமஞ்ஜூசா பங்சமூல பிரிவேனாதிபதி
- தைவக்ஞகாமதேனு அனேமதஸ்ஸி தேரர்
- ஹத்தவனகல்ல விஹாரவங்சய அனேமதஸ்ஸி தேரரின் சீடன்

பகுதி C

6. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தர் கால நிர்வாக நடவடிக்கைகள் பற்றி பின்வரும் துறைகளின் கீழ் ஒப்பிட்டு ஆராய்க.

(i) பொருளாதாரக் கொள்கை ( புள்ளிகள் 16 )

- போர்த்துக்கேயரது பொருளாதாரக் கொள்கை
- ○ பிரதான பொருளாதார நோக்கமாக ஐரோப்பாவில் அதிக பெறுமதிமிக்கனவாகக் காணப்பட்ட
- வாசனைத் திரவியங்கள் உட்பட வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்வது.
- ○ அதற்காக அராபியா, சீனா, மலபார் போன்ற ஆசிய நாட்டு வர்த்தகர்களிடம் இருந்த வர்த்தக
- உரிமையை அபகரித்துக்கொள்வதற்காகச் செயற்பட்டமை.
- ○ போர்த்துக்கேய அரசியல் தலைமையால், பொருளாதார நடவடிக்கைள் மேற்பார்வை செய்யப்
- பட்டமை.
- ○ சுதேச சமூக, பொருளாதார நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொண்டமை.
- உதாரணம்: நிலவுரிமை முறை, சாதி முறை, கட்டாய சேவை, இராச காரிய முறை, வரி
- முறை
- ○ சில வர்த்தகப் பொருட்கள் மீது ஏகபோக உரிமையைக் கைக்கொண்டமை. (கறுவா, யானைத்
- தந்தம், மாணிக்கம், முத்து)
- ○ மலையக இராச்சியத்தில் உள்;ர் வர்த்தககத்தில் ஈடுபட்டமை.
- ○ ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை நடைமுறைப்படுத்தியமை.
- ○ ஆசிய வர்த்தக வலையமைப்புடன் இணைந்து கொண்டமை.

- ஒல்லாந்தரது பொருளாதாரக் கொள்கை
- ○ *கறுவா போன்ற விலையுயர்ந்த வர்த்தகப் பொருட்களை இங்கிருந்து பெற்றுக்கொள்வதுடன்*
- *வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொள்வதும் ஒல்லாந்தரது பிரதான பொருளாதார நோக்கமானது.*
- ○ *ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி மூலம் பொருளாதார நடவடிக்கைகளைக்*
- *கண்காணித்தமை.*
- ○ *சுதேச நிலவுரிமை முறை, குல முறை அடிப்படையிலமைந்த சமூக அமைப்பு மற்றும்*
- *மரபு முறைகள் மூலம் குறைந்த செலவில் இலாபம் பெறல்.*
- ○ *சில வர்த்தகப் பொருட்கள் தொடர்பாக ஏகபோக உரிமைகளைப் பேணியமை. (கறுவா,*
- *யானைத்தந்த வர்த்தகம், மாணிக்கம் அகழ்தல் மற்றும் விற்றல், முத்து விற்பனை)*
- ○ *பிரதான வருவாய் தரும் பொருளாக பாக்கு முக்கியத்துவம் பெற்றமை.*
- ○ *மலையக இராச்சியத்துடன் உள்நாட்டு வர்த்தகத்தைப் பேணியமை.*
- ○ *உப்பு, கறுவா போன்றவற்றை மலையகத்திற்கும் அங்கிருந்து மிளகு, வெற்றிலை, கராம்பு,*
- *ஏலம், தேன் உட்பட பல திரவியங்களைக் கரையோரத்திற்கும் தவளம் முறை ஊடாகப்*
- *போக்குவரத்துச் செய்வித்தமை.*
- ○ *ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தைப் பேணியமை.*
- ○ *ஆசிய வர்த்தக வலையமைப்புடன் இணைந்து கொண்டமை.*
- ○ *ஒல்லாந்து அரசின் செலவைக் குறைத்திடும் நோக்கில் வரையறுக்கப்பட்ட அளவில் உள்நாட்டு*
- *விவசாயத்துறை வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.*
- *உதாரணம்: • முத்துராஜவலயில் பயிரிடல்.*
- ○ *பல குளங்களைப் புனரமைப்புச் செய்தமை. (யோத வாவி, கந்தளாய்,*
- *கிரம மற்றும் ஊறுபொக்க)*
- ○ *கரும்பு, இன்டிகோ, பருத்தி போன்றவற்றைப் பயிரிட்டுச் சீனி உற்பத்தி,*
- *ஆடை நெய்தல் மற்றும் துணிகளுக்குச் சாயமிடல் போன்ற கைத்தொழில்*
- *களை விரிவுபடுத்தியமை.*
- ○ *வரி அறவிடுதலை ஒழுங்கமைக்கத் தோம்புகளை உருவாக்கல்.*
- ○ *வரி அறவிடும் உரிமைமைய ஏலத்தில் விடும் முறையை ஆரம்பித்தமை.*
- ○ *மொரட்டுவையில் தச்சுத் தொழிலை விரிவுபடுத்தியமை.*
- ○ *உச்ச அளவில் இலாபம் பெறும் நோக்கில் யுத்தச் செலவைக் குறைத்துக் கொண்டமை.*

(ii). சமயக் கொள்கை

- போர்த்துக்கேயரது சமயக்கொள்கை
- ○ போர்த்துக்கேயரது காலனித்துவ நிர்வாகத்தில் ஒரு பிரதான நோக்கமாக ரோமன் கத்தோலிக்க
- சமயத்தைப் பரப்புதல் காணப்பட்டது.
- ○ பிரதான இரு இலக்கை அடிப்படையாகக் கொண்டு சமயக்கொள்கையை நடைமுறைப்
- படுத்தியமை.
- போர்த்துக்கல் அரசுக்கு விசுவாசமான குழுவினரை உருவாக்கிக்கொள்ளல்.
- போர்த்துக்கல் அரசு மற்றும் கோட்டை இராச்சியத்த்தை இணைக்கும் பாலமாக விளங்கிய
- பிரதானிகளை தம் சமயத்திற்கு மதமாற்றம் செய்வதன் மூலம் அரசியல் இலாபங்களைப்
- பெறுதல்.
- ○ இயேசு சபை, பிரான்சிஸ்கன் சபை, டொமினிகன் சபை போன்ற மிஷனரி நிறுவனங்களின்
- மூலம் சமயப் பிரசாரம் செய்தமை.
- ○ யாழ்ப்பாண இராச்சியத்திலும் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியமை.
- ○ சமயப் பிரசாரத்திற்காகப் பல்வேறு வழிவகைகளைக் கையாண்டமை.
- கல்வி
- பிரசங்கங்கள் நடாத்துதல்.
- வெகுமதிகள், விருதுகள் மற்றும் பதவிகளை வழங்கியமை.
- வரிகளில் இருந்து விலக்களித்தமை.
- நீதிமன்ற நடவடிக்கைகளில் சலுகைகள் வழங்கியமை.
- அரசு அனுமதித்த சமயங்களை மட்டும் பின்பற்ற அனுமதி வழங்கியமை.
- ○ முஸ்லிம்கள் தொடர்பாக மிகவும் இறுக்கமான கொள்கையினைப் பின்பற்றியமை.
- ○ சில பௌத்த, இந்து புனித நிலையங்களைக் கத்தோலிக்க புனிதத் தேவாலயங்களாக்கியமை.
- ○ இவற்றால் இந்நாட்டில் காணப்பட்ட சமய சகிப்புத்தன்மை மற்றும் ஏனைய சமயங்களுக்கு
- மதிப்பளிக்கும் கொள்கைகள் வீழ்ச்சியுற்றமை.

- ஒல்லாந்தரது சமயக் கொள்கை
- ○ புரட்டஸ்டன்ட் (புரட்டஸ்தாந்து) சமயத்தைப் பரவச் செய்தமை.
- ○ 1656 இல் சமயப் பரப்பலை மேற்கொள்ள பிலிப் பல்தியஸ் பாதிரியார் இலங்கைக்கு வந்தமை.
- ○ பௌத்த, இந்து மற்றும் கத்தோலிக்க மக்களைப் புரட்டஸ்தாந்து சமயத்திற்கு மதமாற்றம்
- செய்திட மதகுருமார் நடவடிக்கை எடுத்தமை.
- ○ புரட்டஸ்தாந்து சமயத்தை ஏற்காத எவருக்கும் அரசின் உயர் மட்டப் பதவிகளை வழங்காமை.
- ○ புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை ஏற்போருக்கு உயர் பட்டம், பதவிகள், பரிசுகள், பரிந்துரைகளைப்
- பெற்றுக் கொடுத்தல்.
- ○ ‘இஸ்கூல்’ ஆரம்பிக்கப்பட்டு அதனைச் சமயப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டமை.
- ○ ஏனைய சமயப் பிள்ளைகளை (ஞானஸ்நானத்தின்) பின்னர் பாடசாலைகளுக்கு உள்வாங்கியமை.
- ○ ஐரோப்பிய பிள்ளைகளுக்கு ‘கொழும்பு செமினரி’ என வேறாக பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- ○ ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கக் கொழும்பு நகரில் ‘நோமல் பாடசாலை’ ஆரம்பித்தமை.
- ○ கற்றல் நடவடிக்கைகளைக் கொலாச் கொமிசன் சபையொன்றின் மூலம் நிர்வகித்தமை.
- ○ 1739 இல் சிங்கள அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தி சிங்களத்தில் பைபிளை அச்சிட்டுப்
- பிரசுரித்தமை.

**7.** கி.பி.1848 கிளர்ச்சி, கிளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணங்கள், போராட்டத் தலைவர்கள் மற்றும் அதன் விளைவுகள் என்பவற்றை விளக்குக.

( புள்ளிகள் 16 )

- ○ பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேற்கொண்ட ஆயுதம் தாங்கிய போரட்டமாக இது
- காணப்படல்.
- ○ மாத்தளை, குருநாகல் ஆகிய இடங்களில் தீவிரமாகப் பரவிய இது கொழும்பிலும் ஓரளவில்
- ஏற்படல்.
- ○ இந்தப் போராட்டத்திற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை நீண்டகால மற்றும் குறுகிய
- காலக் காரணிகளாக நோக்க முடிகின்றமை.
- ○ கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்களின் செல்வாக்கு
- ○ மலையகம் மற்றும் கரையோரத்தை ஒன்றிணைத்ததன் காரணமாக மலையகப் பாரம்பரியத்
- திற்குப் பாதிப்பு ஏற்பட்டமை.
- ○ சிவில் சேவையாளர்களுக்குப் பெருந்தோட்டத்தில் ஈடுபட அனுமதி வழங்கியமையினால்
- நிர்வாகம் சீர்குலைந்தமை.

- ○ இராஜகாரிய முறையை ஒழித்ததுடன் நிலம் விற்கும் கொள்கை அறிமுகப்படுத்தியதனால்
- பாரம்பரிய நிலவுரிமை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டமை.
- ○ கிராம சபைகளைப் புறக்கணித்தமையினால் கிராம மக்களின் பிரச்சினைகள் அதிகரித்தமை.
- ○ புதிய நீதிமன்ற முறையினால் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டமை.
- ○ 1840 இல. 12 நிலத்தை உடைமையாக்கும் சட்டத்தினால் விவசாயிகள் தமது பாரம்பரிய
- நிலங்களை இழந்தமை.
- ○ ஐரோப்பிய பயிர்ச் செய்கையாளர்கள், தென்னிந்திய தொழிலாளர், கரையோர வியாபாரிகள்
- என புதியவர்கள் மலையகத்தில் குடியேறியதனால் மலையகப் பிரதேசங்களில் பாரம்பரியமான
- மக்கள் வாழ்க்கை முறைக்கு தீங்கான விளைவுகள் ஏற்பட்டமை.
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டமையால் சுதேச விவசாயம்
- மற்றும் மக்கள் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்தது.
- ○ மலையகத்தில் மதுபான சாலைகள் திறந்தமையால் சமூக சீர்கேடுகள் அதிகரித்தமை.

❖ குறுகிய காலக் காரணங்க்கள்

- ○ அரசின் வருவாயை அதிகரித்துக்கொள்ள ஆளுனர் டொரிங்டன் புதிய வரிகளை விதித்தமை.
- உதாரணம்: கடை வரி, வண்டி வரி, படகுவரி, ஓடத்துறை வரி, துப்பாக்கி வரி, உடல் வரி,
- முத்திரை வரி, நாய் வரி.
- ○ அரசிற்கும் சமயத்திற்கும் இடையில் நிலவிய பாரம்பரியமான நெருங்கிய உறவினை வீழ்ச்சியுறச்
- செய்து புனித தந்ததாதுவின் பாதுகாப்பைப் பிக்குகளிடமும் தியவடன நிலமேயிடமும்
- பொறுப்பளித்தமை.
- ○ நிலத்தை வெளிநாட்டவர்களுக்கு விற்பதன் கொள்கை காரணமாக மலையகத்தவர் மத்தியில்
- அவநம்பிகை ஏற்பட்டமை.
- போராட்ட்டத்தின் ஆரம்ப்பமும் பரவலும்
- ○ அரசின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பொதுமக்கள் ஒன்றுகூடியமை.
- ○ கொழும்பு, வாரியபொல, குருநாகல் போன்ற பிரதேசங்களுக்குப் பரவியமை.
- ○ பதுளையில் ஒன்றுகூடிய விவசாயிகளுள் சிலர் துப்பாக்கி வரிக்கு தம் எதிர்ப்பைத் தெரிவித்து
- அரச அதிபரின் முன்னாலேயே துப்பாக்கிகளை நிலத்தில் அடித்து உடைத்தமை.
- ○ மாத்தளை, வாரியபொல, குருணாகல் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆயுதம் தாங்கியவர்களாக
- அரசின் கட்டடங்கள் மற்றும் நீதிமன்றம் என்பவற்றைத் தாக்கியமை.
- ○ 1848 போராட்டத்தில் மைய நிலையமாக மாத்தளை திகழ்ந்தமை.
- ○ பிரித்தானிய ஆட்சியினால் இடருற்ற சாதாரண மக்கள் மத்தியிலிருந்து கொங்காலே கொட
- பண்டா, புரன் அப்பு, டிங்கிரால, தீனிஸ் போன்ற தலைவர்கள் தோன்றியமை.
- ○ கொங்காலேகொட பண்டா மன்னனாக முடிசூட்டப்படல். (ஸ்ரீ விக்ரம சர்வசித்தி ராஜசிங்க)
- ○ வரி எதிர்ப்புப் போராட்டமாக ஆரம்பித்து, ஆங்கில ஆட்சியை முறியடிக்கும் நோக்கைப்
- பிரதானமாகக் கொண்டு போராட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

❖ 1848 சுதந்த்திரப் போராட்ட்டத்த்தின் விளைவுகள்

- ○ மக்கள் எதிர்பார்ப்பை முறியடித்து
- ஆங்கிலேயர்கள் கொடூரமாகப் போராட்டத்தை அடக்கியமை.
- ○ போராட்டத்தின் தலைவர்கள் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டுக் கொடிய தண்டனைகள் நிறைவேற்றப்பட்டமை.
- ○ குடஹபொல தேரர் சுட்டுக் கொல்லப்பட்டமை. கொங்காலேகொட பண்டாவிற்கு எதிராக வழக்கு விசாரணை செய்யப்பட்டு கசையடி கொடுத்து நாடு கடத்தியமை.
- ○ புரன்அப்புவிற்கு மரண தண்டனை விதித்தமை. போராட்டத்தின் போது கடமையில் இருந்த பிரித்தானிய ஆளுனர் டொரிங்டன், அரச செயலாளர் டெனன்ட் ஆகியோரைப் பிரித்தானியா விற்கு அழைத்துக் கொண்டமை.
- ○ போராட்டத்திற்கான காரணம் கண்டறிய நியமிக்கப்பட்ட சபையின் ஆலோசனைப்படி புதிய
- வரிகளை நீக்கியதுடன் சீர்திருத்தியமை.
- 1850 இன் பின்னர் அதிகாரத்திற்கு வந்த பிரித்தானிய ஆளுனர்கள் சிலர் விவசாயிகள் மீது அக்கறை கொண்டு விவசாய நடவடிக்கைகள் வளர்ச்சியடைய நடவடிக்கை எடுத்தமை.
- போராட்டம் தோல்வியுற்றமையினால் பிரித்தானியரது அதிகாரம் மேலும் வலுவுற்றமை.

**8.** இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றில் முக்கிய மைல் கல்லொன்றாக டொனமூர் யாப்பு கருதப்படுகின்றது.

**i.** டொனமூர் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டின் பிரித்தானிய ஆளுநராக பதவி வகித்தவர் யார்? (1 புள்ளி)

ஹேபர்ட் ஸ்டேன்லி

**ii.** டொனமூர் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

டொனமூர் பிரபு, ஜெப்ரி பட்லர், மெத்திவ் நெதன், டிமன்ட் சீல்

**iii.** டொனமூர் யாப்பிற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மனிங் டெவன்சயர் யாப்பு சீர்திருத்தத்தின் பண்புகளை விளக்குக. (4 புள்ளிகள்)

- 1924இல் நடைமுறைப்படுத்தப்பட்டது
- சட்டவாக்கக்கழக உறுப்பினர் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட்டது
- இவர்களுள் அரைவாசிக்கு மேற்பட்டோர் பொதுமக்களது வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டனர்

**iv.** டொனமூர் யாப்பின் சிறப்பம்சங்களை மதிப்பிடுக. (9 புள்ளிகள்)

- மனிங், டெவன்ஷயர் யாப்பு அதிகாரமும் பொறுப்பும் வெவ்வேறாகக் காணப்பட்ட பலவீனமான
- யாப்பாகக் காணப்பட்டமையால் அதற்கு எதிரான கிளர்ச்சிகளின் விளைவாக இலங்கைக்குப்
- பொருத்தமான யாப்பு ஒன்றைச் சிபாரிசு செய்வதற்காக டொனமூர் பிரபு தலைமையிலான
- ஆணைக்குழு வருகை.
- இவ்வாணைக் குழுவில், டொனமூர் பிரபு, ஜெப்ரி பட்லர், மெதிவ் நேதன், டிரமன்ட சீல்ட் எனும் நால்வர் இடம்பெற்றமை.

❖ டொனமூர் யாப்ப்பின் சிறப்ப்பம்ச்சங்க்கள்

- அரசுக் கழகம் அறிமுகம்
- நிர்வாகக்குழு முறை அறிமுகம்
- ஆளுநரின் அதிகாரங்கள் குறைப்பு.
- அரச செயலாளர்கள் மூவர்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறை நீக்கம்
- சர்வசன வாக்குரிமை அறிமுகம்
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கம்

❖ அரசுக்கழகம்

- சட்டவாக்கக்கழகம், சட்ட நிர்வாகக் கழகம் எனும் இரண்டும் நீக்கப்பட்டு அரசுக்கழகம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- அரசுக்கழக உறுப்பினர் தொகை 61 ஆகும்.
- தேர்தல் தொகுதி அடிப்படையில் சர்வசன வாக்குரிமை மூலம் - 50
- ஆளுனரின் நியமனம் - 08
- அரச செயலாளர்கள் - 03
- சர்வசன வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் சபாநாயகராக அரசுக் கழகத்தின் தலைமைப் பதவியை வகித்தமை.

❖ அரசுக்கழகத்தின் அதிகாரங்களும் பணிகளும்

- சட்டமியற்றும் அதிகாரம்
- வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- நிர்வாகத் துறைக்கு ஆலோசனை சமர்ப்பித்தல்.
- நிர்வாகக் குழுக்களின் செயற்பாடுகளைப் பரிசீலித்தல்.

❖ நிர்வாகக் குழுக்கள் (07)

- உள்நாட்டலுவல்கள் நிர்வாகக் குழு
- விவசாயமும் காணியும் நிர்வாகக்குழு
- உள்ளூராட்சி மன்ற நிர்வாகக்குழு
- சுகாதார நிர்வாகக்குழு
- கல்வி நிர்வாகக்குழு
- தொழில், கைத்தொழில், வர்த்தக நிர்வாகக்குழு

• அரச செயலாளர், சபாநாயகர் தவிர்ந்த அரசுக்கழக உறுப்பினர் 50 பேரும் 07 நிர்வாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டமை.
• ஒரு நிர்வாகக்குழுவில் கூடிய பட்சம் 09 பேரும் குறைந்தபட்சம் 06 பேரும் இடம்பெற்றமை.
• நிர்வாகக் குழுவின் பெரும்பான்மையோரின் விருப்பப்படி அதன் தலைவர் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவர் அக்குழு தொடர்பான அமைச்சராவார்.
• நிர்வாகக் குழுக்களின் தலைவர்கள் 07 பேருடன் அரச செயலாளர் 03 பேரையும் கொண்ட அமைச்சரவை ஒன்று செயற்பட்டது.

❖ ஆளுனர்
• பிரித்தானிய முடியின் பிரதிநிதி
• பாதுகாப்புத்துறை
• வெளிவிவகார துறை
• குடிவரவு செயற்பாடுகள்
• கப்பல் போக்குவரத்து
• வர்த்தக உடன்படிக்கைகள்
• நிதிச் சேவை நடவடிக்கைகள்
• நீதிமன்றச் செயற்பாடுகள் முதலியவை ஆளுனருக்குரியவை.
• மேற்படி நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் நேரடியாக குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியிருந்தது.

❖ அரச அதிகாரிகள்
• பொதுச் செயலாளர்
• நிதிச் செயலாளர்
• சட்டச் செயலாளர்

❖ பொதுச் செயலாளர்
• பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், அரச சேவை என்பவற்றை நிர்வகித்தல்.

❖ நிதிச் செயலாளர்
• வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
• அரச வருமானத்தைத் திரட்டுதலும் பகிர்தலும்.
• வெளிநாட்டுக் கடன் கொடுக்கல், வாங்கலை நிர்வகித்தல்.
• நிதிக் கொள்கை
• அரச திறைசேரியின் பொறுப்பாளர்.

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

**(i)** கண்டியர் கால சமூக ஒழுங்கமைப்பு

- நாட்டின் அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளனாக மன்னன் ஏற்றுக்கொள்ளப்பட்டமை.
  - நிலத்தின் உரிமை மற்றும் உபயோகப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு கபடாகம், நிந்தகம், விகாரகம், தேவாலகம், பரவேனிகம் எனப் பல பிரிவுகளாகக் காணப்பட்டமை.
  - குடியானவன் தான் உபயோகப்படுத்தும் நிலத்துக்காக ஏதேனும் ஒரு சேவையை அல்லது பொருளைக் கொடுத்தமை.
  - சமூகத்தின் பிரதான அலகாக குடும்பம் இருந்தமை.
  - குல முறையை அடிப்படையாகக் கொண்ட கிராமிய சுயதேவைப் பூர்த்திச் சமூகம் நிலவியமை.
  - அந்தந்த குலத்துக்கென வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் காண முடிகின்றமை.
  - ஒத்த குலங்களிடையில் திருமணங்கள் நடைபெற்றமை.
  - திருமணமானது தீக திருமணம் (மனைவி கணவன் வீட்டில் வசித்தல்), பின்ன திருமணம் (கணவன் மனைவி வீட்டில் வசித்தல்), பல புருஷ திருமணம் எனும் மூன்று முறைகளில் செயற்பட்டமை.
  - அத்தம் முறைப்படி விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் கிராமத்தவர் அனைவரினதும் ஒத்துழைப்புடன் ஒவ்வொருவரதும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை.
  - விகாரையுடன் ஒன்றிணைந்த பண்பட்ட சமூகமாகக் காணப்பட்டமை.

**(ii)** தேசிய இயக்கத்தின் ஆரம்பம்

- வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை பெறுவதற்காக ஒரு நாட்டின் எல்லா இனக் குழுவினரும் இணைந்து ஒரே நோக்கில் ஒழுங்கமைந்து முன்னெடுக்கும் போராட்டமே தேசிய இயக்கம் எனப்படும்
- **19**ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் **20** ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் உருவான தேசிய இயக்கங்கள்

- அரசியல் யாப்பு சீர்திருத்தங்களுக்கான போராட்ட இயக்கங்கள்
- இலங்கை சீர்திருத்த சங்கம்
- சிலாபச் சங்கம்
- யாழ்ப்பாண சங்கம்
- இலங்கை விவசாய சங்கம்
- மது ஒழிப்பு இயக்கம்
- இலங்கை தேசிய சங்கம்

- தேசிய இயக்கத்தின் நோக்கங்கள்

- யாப்பு சீர்திருத்தங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்

- தேசிய ஐக்கியத்தை கட்டி எழுப்பல் போராட்ட இயக்கங்களை முன்னெடுத்தல்

- சமய கலாச்சார மறுமலர்ச்சியை ஏற்படுத்தல்

- பொறுப்புடன் கூடிய அரசியல் யாப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக முயற்சித்தல்

- அமைதியான போராட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்

- குறுகிய காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை விடுவித்தல்

**(iii)** பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் கீழான கரையோரப் பிரதேச நிர்வாகம்

- ஆளுனர் நோர்த் இரட்டை ஆட்சியின் பலவீனங்களை குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு எடுத்துக்காட்டிய பின் கி.பி. 1802 ஆம் ஆண்டிலிருந்து கரையோரப் பிரதேசங்களின் நிர்வாகம் முழுவதும் பிரித்தானிய முடியின் கீழ் கொண்டுவரப்பட்டமை.
- கரையோரப் பிரதேசங்களில் நிர்வாக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுனர் பிரித்தானிய அரசுக்குப் பொறுப்புக்கூற வேண்டியிருந்தமை.
- இலங்கைக்கென்று தனியான சிவில் சேவையொன்றை ஆரம்பித்து, உயர் பதவிகளுக்குப் பிரித்தானிய சிவில் சேவையாளரை நியமித்தமை.
- நிர்வாக நடவடிக்கைகளுக்காக பிரித்தானியாவில் இருந்த திணைக்கள முறையை அறிமுகப் படுத்தியமை.
- சென்னையிலிருந்து அதிகாரிகளை வரவழைப்பதைத் தடுத்துச் சுதேச அதிகாரிகளை அப்பதவிகளுக்கு நியமித்தமை.
- நோர்த் ஆளுனரினால் இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
- தோமஸ் மெய்ட்லண்ட் ஆளுனரது தந்திரமான நிர்வாகக் கொள்கைகள்.
- கரையோரப் பிரதேசங்களில் பயணித்து முறையான ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் இவரால் நிர்வாக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டமை.
- ஜோன் டொய்லியைக் கொண்டு மலையக இராச்சியம் பற்றிய தகவல்களைச் சேகரித்தமை.
- சுதேச நிர்வாகக் கட்டமைப்பு முழுவதையும் தவிர்க்காது சாமர்த்தியமாக சுதேச அதிகாரிகளின் அதிகாரத்தைப் பலவீனமடையச் செய்தமை.
- ஆளுனர் நோர்த்தினால் நிலவுரிமை மீதான இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்ட நிலையில் கட்டாய சேவை இராஜகாரிய முறையை மீளவும் நிறுவியமை.
- சிவில் சேவையைச் சீர்திருத்தியமை.

**(iv)** மகாவலி அபிவிருத்தித் திட்டம்.

- மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் முதல் கட்டம் பொல்கொல்லை அணைக்கட்டின் மூலம் இராசரட்டைப் பகுதிக்கு மகாவலி நீரைத் திசை திருப்புவதாகும்.
- மிகுதிக் கட்டங்களை 30 வருட காலத்தில் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை.
- 1977 இல் ஆட்சிக்குவந்த ஜே.ஆர். ஜயவர்தன அதனை 06 வருட காலத்தில் முடித்தமை. (துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம்)
- 1978 இல் மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஆரம்பிக்கப்பட்டமையும் 1979 மகாவலி அதிகார சபை உருவாக்கப்பட்டமையும்.
- துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, ரன்டெம்பே, உல்ஹிட்டிய, ரத்கிந்த, மாதுறு ஓயா
- நெல்லுற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேறு நடவடிக்கைகள்
- நெல்லுக்கான உத்தரவாத விலை
- நெல் ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் புதிய நெல்லினங்கள் அறிமுகம் உதாரணம்: பதலேகொட நெல் ஆராய்ச்சி நிலையம் (BG)
- கமநல சேவை மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
- அரசாங்க வங்கிகள் மூலம் விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டமை. (புள்ளிகள் **08 x 2 = 16** )